தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 22, புதன்கிழமை

சித்திரை 9, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு".

செய்யத்தக்க செயலை ஆராய்தலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தைச் சொல்லுதலும் வல்லவன் அமைச்சன்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அரசு மருத்துவமனைகளில் நிர்வாக அதிகாரிகளை நியமித்தல்.

440—(* வினா எண். 1326) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பெரிய அரசு மருத்துவமனைகளில் நிர்வாகப் பொறுப்பை சிறப்பாக கண்காணிக்கும் பொருட்டு நிர்வாக அதிகாரிகள் (Administrative Officers) நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஐந்து பெரிய அரசு மருத்துவ மனைகளில் நிர்வாகப் பொறுப்பை சிறப்பாக கண்காணிக்கும் பொருட்டு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்களை நியமிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ மனைகளிலே கூட டி.எம்.ஓ. போன்றவர்கள் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றார்கள். அவர்கள் மருத்துவ மனைப் பொறுப்பையும் நிர்வாகப் பொறுப்பையும் மேற்கொள்கின்ற பொழுது, முழுமையாக, மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளைக் கவனிப்பது அல்லது, மற்றைய டாக்டர்களை முறைப்படுத்தி பணி வாங்குவது பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே, அதைக் கருத்திலே கொண்டு, குறைந்தபட்சம் எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலாவது இப்படிப்பட்ட அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்களைப் போடுவதற்கு அரசு விரைவாகப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 5 இடங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். சென்னையிலுள்ள ஸ்டான்லி மருத்துவ மனை, அரசு பொது மருத்துவ மனை, இராயப்பேட்டை மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, மதுரையிலுள்ள இராஜாஜி மருத்துவ மனை ஆகியவற்றில் இப்பொழுது இருக்கிறார்கள். மீதம் இருக்கிற கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய கல்லூரிகளிலே நியமிக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அவற்றிற்கு நியமித்ததற்குப் பிறகு, மாவட்டங்களுக்குத் தேவைப்பட்டால் அரசு பரிசீலிக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் கருத்தடை செய்துகொண்டவர்கள்.

441—(வினா எண். 2856) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்—*

(அ) 1984-85 மற்றும் 1985-86-ல் தஞ்சை மாவட்டத்தில் கருத்தடை செய்துகொண்டவர்களில் உடல் நலம் பாதிக்கப்பட்டதாக அரசிடம் உதவி கேட்டு மனுக்கள் ஏதேனும் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை?